பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

25 09 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடியின் அமெரிக்க பயணம் வெற்றிகரமாக அமைந்ததற்கு மத்திய அமைச்சர்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
2. மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளை உள்ளாட்சி பிரதிநிதிகளின் கருத்துக்களின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டுமென்று மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.
3. கன்னியாகுமரி மாவட்டம் கோதையாறு பாசன திட்ட அணைகளிலிருந்து இன்று முதல் 138 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.
4. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.
5. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிர்வாகக்குழுக் கூட்டம் மும்பையில் இன்று நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி நேற்று இரவு புதுதில்லி திரும்பினார்.

தமது இந்த பயணத்தின்போது குவாட் அமைப்பின் உச்சி மாநாடு,

ஐ நா சபை உச்சி மாநாடு ஆகியவற்றில் அவர் உரையாற்றினார்.

அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் பிரதமர் சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

பிரதமரின் அமெரிக்க பயணம் வெற்றிகரமாக அமைந்ததற்கு மத்திய அமைச்சர்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கடந்த பத்து ஆண்டுகளில் உலக அளவிலான மாற்றங்களுக்கு இந்தியா அளித்த ஊக்கத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிரதமரின் பயணம் அமைந்ததாக கூறியுள்ளார்.

பிரதமர் பங்கேற்ற நிகழ்ச்சிகள் உலக அளவிலான அவரின் புகழை வெளிப்படுத்தும் வகையில் அமைந்ததாகவும் திரு அமித்ஷா குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அமைச்சரும், பிஜேபி தலைவருமான திரு ஜெ பி நட்டா, பிரதமரின் அமெரிக்க பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், நீண்டகால வளர்ச்சியை உள்ளடக்கியதாகவும் அமைந்தது என்று தெரிவித்துள்ளார்.

பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதாதள தலைவருமான திரு நிதிஷ்குமார், அமெரிக்க பயணத்தின்போது பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள்

எடுத்த முடிவுகள் இந்தியாவுக்கும், மற்ற நாடுகளுக்கும் முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையில் அமைந்ததாகக் கூறியுள்ளார்.

ஆந்திர மாநில முதலமைச்சரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான திரு சந்திரபாபு நாயுடு, உலக நாடுகளுக்கு இடையே இந்தியாவின் நிலையை மேலும் வலுப்படுத்துவதாக பிரதமர் திரு நரேந்திரமோடியின் அமெரிக்க பயணம் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் நல்லுறவில் உள்ள உலக நாடுகளின் தலைவர்களை ஒன்றிணைக்கும் வகையில் பிரதமரின் ஐ நா உரை அமைந்திருந்ததாகவும் திரு சந்திபாபு நாயுடு பாராட்டு தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சரும், மதசார்பற்ற ஜனதாதள தலைவருமான திரு எச் டி குமாரசாமி, அணுசக்தி, செமி கண்டக்டர்ஸ் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பிரதமர் இந்த பயணத்தின்போது முக்கிய முடிவுகளை மேற்கொண்டிருப்பது பாராட்டுக்குரியது என்று கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டும் பிரதமரின் அயராது முயற்சிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு குமாரசாமி குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

அதிகரித்து வரும் மருத்துவ நிபுணர்களின் தேவையை கருத்தில் கொண்டு அடுத்த ஐந்து ஆண்டுகளில் 75 ஆயிரம் மருத்துவ இடங்கள் என்ற இலக்கை எட்ட தேசிய மருத்துவ ஆணையம் திட்டமிட்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று இந்த ஆணையத்தின் நான்காவது ஆண்டு விழாவில் பங்கேற்று பேசிய அவர், கடந்த நான்கு ஆண்டுகளில் 25 ஆயிரம இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதற்காக இந்த ஆணையத்திற்கு பாராட்டு தெரிவித்த அவர், தொடர்ந்து மருத்துவ இடங்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவ மாணவர்களால் உருவாக்கப்பட்ட கட்டுரை தொகுப்பையும் திரு ஜெ பி நட்டா வெளியிட்டார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

காலை ஏழு மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை நடைபெறும்.

26 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இன்று இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

வாக்குப்பதிவையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக மூவாயிரத்து 500 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தலை சுமூகமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு ஏதுவாக அனைத்து வாக்குச்சாடிகளிலும் நடைபெறும் வாக்குப்பதிவை தேர்தல் ஆணையம் இணையதளம் மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்துள்ளது.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் பல்வேறு தரப்பு மக்களும் ஒரே நாடு – ஒரே தேர்தல் நடைமுறைக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்த திட்டத்தை வரவேற்றுள்ள நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் இதனால் செலவினம் குறையும் என்று தெரிவித்துள்ளனர்.

*( சவுண்ட்பைட் - பொமக்கள்) --52--- செகண்ட்*

[]<<<>>>[]

மக்களுக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகளை அந்தந்த பகுதி உள்ளாட்சி பிரதிநிதிகளின் கருத்துக்களின் அடிப்படையில் அலுவலர்கள் செயல்படுத்த வேண்டுமென்று மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அவர் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டம், மகாத்மாகாந்தி ஊரக வேலை உறுதித் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து அவர் கேட்டறிந்தார்.

மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டுமென்று அமைச்சர் திரு சக்கரபாணி அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

[]<<<>>>[]

மாணவர்கள் கல்வியில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டுமென்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.

தஞ்சை மாவட்டம் பேராவூரணி தொகுதிக்கு உட்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளியில் நேற்று ஆய்வு மேற்கொண்ட அவர், பள்ளி மாணவ மாணவியரிடையே கலந்துரையாடினார்.

கல்வி ஒன்றுதான் உயர்வுக்கு வழி என்பதால் மாணவர்கள் படிப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மாவட்டம் கோதையாறு பாசன திட்ட அணைகளிலிருந்து இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் ஒன்பதாம் தேதி வரை வினாடிக்கு 150 கன அடிக்கு மிகாமல் அணைகளின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தைப் பொறுத்து 138 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என்றும், இதன் மூலம் ராதாபுரம் கால்வாய் பாசனத்துக்கு உட்பட்ட 17 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

லெபனானில் ஹெஸ்புல்லா அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலைத் தொடர்ந்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பள்ளிகள் மற்றும் அரசு கட்டிடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

[]<<<>>>[]

இலங்கை நாடாளுமன்றத்தை கலைத்து அந்நாட்டு அதிபர் திரு அநுர குமார திசநாயகே உத்தரவிட்டுள்ளார்.

[]<<<>>>[]

உத்திரபிரதேச மாநில சர்வதேச வர்த்தக கண்காட்சியை குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் நொய்டாவில் இன்று தொடங்கி வைக்கிறார்.

[]<<<>>>[]

நேரடி வரிகள் தொடர்பான 573 வழக்குகளை உச்சநீதிமன்றம் நேற்று முடித்து வைத்திருப்பதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

புதிதாக அமைக்கப்பட்டு வரும் நவி மும்பை சர்வதேச விமான நிலையத்தில் முதல் விமானம் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி சோதனை அடிப்படையில் தரையிறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

சேலம் மாநகராட்சியின் தனி குடிநீர் திட்டத்தின் கீழ் மோட்டார் பம்ப் உள்ளிட்ட பணிகளை மறுசீரமைப்பதற்காக சுமார் 15 கோடி ரூபாய்க்கு தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளது.

[]<<<>>>[]

தடை செய்யப்பட்ட அமைப்பிற்கு ஆள் சேர்த்ததாகக் கூறப்படும் புகார் தொடர்பாக சென்னை, கன்னியாகுமரி உள்ளிட்ட 11 இடங்களில் தேசிய புலனாய்வு அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

[]<<<>>>[]

தேனி மாவட்டத்தில் எரிவாயு நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறும் என ஆட்சியர் திருமதி ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் பொம்மசமுத்திரம் கிராமத்தில் தூய்மையே சேவை இயக்கத்தின் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் உண்டியல் காணிக்கையாக ஐந்து கோடியே 12 லட்சம் ரூபாய் கிடைத்துள்ளது.

[]<<<>>>[]

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிர்வாகக்குழுக் கூட்டம் மும்பையில் இன்று நடைபெறுகிறது.

பெங்களூருவில் வரும் 29-ஆம் தேதி பி சி சி ஐ ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இன்றைய கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

[]<<<>>>[]

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டல் நடைபெற்ற 45-வது செஸ்ஒலிம்பியாட் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த மூன்று வீரர் வீராங்கனைகள் மற்றும் அணித்தலைவர் ஆகியோருக்கு 90 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகைக்கான காசோலையை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

ஆடவர் மற்றும் மகளிர் என இரண்டு பிரிவிலும் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர்கள் குகேஷ், ப்ரக்ஞானந்தா, வைஷாலி ஆகியோருக்கு தலா 25 லட்சம் ரூபாயும்,

அணித்தலைவர் ஸ்ரீநாத் நாராயணனுக்கு 15 லட்சம் ரூபாயும் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது.

***End of News***